

விருதுநகர் மாவட்டம் , அருப்புக்கோட்டையில் ரூ.154.98 கோடி மதிப்பில் நடைபெற்று வரும் அருப்புக்கோட்டை புறவழிச்சாலை அமைக்கும் பணிகளின் முன்னேற்றம் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர் வீ.ப.ஜெயசீலன், தலைமையில் , வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமசந்திரன் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் அருப்புக்கோட்டை நகர் மன்றத் தலைவர் சிவப்பிரகாசம் சுந்தரலட்சுமி, நகர தி.மு.க. செயலாளர் ஏ.கே.மணி, மாநில நெசவாளர் அணி செயலாளர் பழனிச்சாமி, ஒன்றிய செயலாளர் பாலகணேஷ், ஒன்றிய கவுன்சிலர் பாலச்சந்தர் ஆகியோர் இருந்தனர்.



கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் அரசின் மூலம் மதுரை மத்திய தொகுதியில் கொண்டுவரப்பட்ட சாதனை திட்டங்கள் குறித்த 16வது செயல்பாட்டு அறிக்கையினை, தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன், முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் சிலைக்கு மாலை அணிவித்து, மரியாதை செலுத்தி பின் தொகுதி மக்களிடம் நேரில் சென்று வழங்கினார். இதில் மதுரை மாநகராட்சி மேயர் இந்திராணி பொன் வசந்த், மண்டல தலைவர் பாண்டிச்செல்வி, மாமன்ற உறுப்பினர்கள் இந்திரா காந்தி ராஜேந்திரன், விஜயா குரு, கார்த்திக், பகுதி செயலாளர்கள் சரவண பாண்டியன், கண்ணன் மற்றும் கழகத்தினர், பொதுமக்கள் பங்கேற்றனர்.

### திண்டுக்கல் மாவட்டத்திற்கு வருகை தந்த

# துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலினுக்கு மாவட்ட எல்லையில் உற்சாக வரவேற்பு!

## அமைச்சர்கள் ஐ.பெரியசாமி-அர.சக்கரபாணி தலைமையில் தி.மு.க. தொண்டர்கள் அளித்தனர்!

திண்டுக்கல், அக்.23-

துணை முதல்வராக பொறுப்பேற்று முதல்முறையாக திண்டுக்கல் மாவட்டத்திற்கு வருகை தந்த உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு திண்டுக்கல் எல்லையில் உற்சாக வரவேற்பை ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி, உணவுத்துறை அமைச்சர் அர.சக்கரபாணி தலைமையில் திமுக தொண்டர்கள் அளித்தனர்.

தமிழக அமைச்சரவையில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுதுறை, சிறப்பு செயலாக்கத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் துணை முதல்வராக பொறுப்பேற்ற பின்பு தமிழகம் முழுவதும் சென்று நலத்திட்டங்களை வழங்கி வருவதோடு மூத்த திமுக நிர்வாகிகளையும் சந்தித்து வாழ்த்தும் பெற்று வருகிறார். நத்தம் முன்னாள் எம்.எல்.ஏ. ஆண்டி அம்பலம் அவர்களின் இல்ல திருமண விழாவில் கலந்துகொள்வதற்காக சேலத்திலிருந்து திண்டுக்கல் மாவட்டத்திற்கு துணை முதல்வராக பொறுப்பேற்ற பின்பு முதன்முறையாக வந்த துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு திண்டுக்கல் மாவட்ட நுழைவு எல்லையான வேடசந்தூர் அய்யர் மடம் அருகே திண்டுக்கல் கிழக்கு மற்றும் மேற்கு மாவட்ட திமுக சார்பாக ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி தலைமையில் உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல்த் துறை அமைச்சர் அர. சக்கரபாணி, திண்டுக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் ஐ.பி.செந்தில்குமார் தலைமையில் மாபெரும் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

துணை முதல்வராக பொறுப்பேற்ற பின்பு முதன்முறையாக திண்டுக்கல் மாவட்டத்திற்கு வந்த உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் ஐ.பெரியசாமி சால்வை மற்றும் பூங்கொத்து கொடுத்து வரவேற்றார் அவரை தொடர்ந்து உணவுத்துறை அமைச்சர் அர.சக்கரபாணி, திண்டுக்கல் கிழக்கு மாவட்ட திமுக செயலாளர் ஐ.பி.செந்தில்குமார் ஆகியோர் பூங்கொத்து கொடுத்து வரவேற்றனர். அப்போது அங்கு கூடியிருந்த நூற்றுகணக்கான திமுக தொண்டர்களை பார்த்து துணைமுதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தனது கைகளை ஆட்டி உற்சாகபடுத்தினார்.

அப்போது தி.மு.க. இளைஞர் அணியை சேர்ந்த தொண்டர்கள் உதய் அண்ணா, உதய் அண்ணா உதய் சார் என உற்சாக குரல் எழுப்பி தங்களுடைய மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்கள். கொட்டும் மழையிலும் தனக்காக 5மணிநேரம் காத்திருந்து வரவேற்பு அளித்த திமுக நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள், இளைஞர்களை பார்த்து துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உற்சாகப்படுத்திவிட்டு திண்டுக்கல் நோக்கி புறப்பட்டார்.

நிகழ்ச்சியில் வேடசந்தூர் எல்.எல்.ஏ. காந்திராஜன், மாநில திமுக வர்த்தகர் அணி இணைச் செயலாளர் ஜெயன், கிழக்கு மாவட்ட தி.மு.க அவைத்தலைவர் வழக்கறிஞர் காமாட்சி, மாவட்ட துணைச் செயலாளர்கள் ஆ.நாகராஜன், பிலால் உசேன், மார்க்கிரேட் மேரி, பொருளாளர் கு.சத்தியமூர்த்தி, தலைமை செயற்குழு உறுப்பினர்கள் தண்டபாணி, ஆத்தூர் நடராஜன்,திண்டுக்கல் மேற்கு மாவட்ட தி.மு.க. பொருளாளர் சாணார்பட்டி விஜயன், துணை செயலாளர்கள் ராஜாமணி, தாமரை செல்வி, சுந்தர்ராஜன், திண்டுக்கல் மாநகர மேயர் இளமதிஜோதி பிரகாஷ், துணை மேயர் இராஜப்பா, மாநில மாணவரணி துணைச்செயலாளர் பொன்ராஜ், ஒன்றியச் செயலாளர்கள் ரெட்டியார்சத்திரம் ப.க.சிவகுருசாமி, ஜோதீஸ்வரன், வீராசாமிநாதன், கவிதா பார்த்திபன், குஜிலியம்பாறை ஒன்றியச் செயலாளர் சீனிவாசன், வடமதுரை ஒன்றிய செயலாளர்கள் சுப்பையன், பாண்டி, ஆத்தூர் கிழக்கு ஒன்றியச் செயலாளர் முருகேசன், மேற்கு ஒன்றிய செயலாளர் ராமன், ரெட்டியார்சத்திரம் வடக்கு ஒன்றிய செயலாளர் மணி, நிலக்கோட்டை மணிகண்டன், சௌந்தரபாண்டி, கொடைக்கானல் கருமலை பாண்டி, திண்டுக்கல் கிழக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கணேசன், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் கே.அஸ்வின் பிரபாகரன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் ப.ராஜேஸ்பெருமாள், மாயக்கண்ணன், மணலூர் மணிகண்டன் மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர்கள் குட்டி (எ)துரைப்பாண்டி, முத்துக்குமார், மாவட்ட வர்த்தகர் அணி அமைப்பாளர்கள் பொன்முருகன், பண்ணை கார்த்திக், ஒட்டன்சத்திர நகர செயலாளர் வெள்ளைச்சாமி, மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் முருகானந்தம், விவசாய அணி அமைப்பாளர் இல.கண்ணன், மாவட்ட தொண்டரணி துணை அமைப்பாளர்கள் விவேகானந்தன், விடுதலை முருகன், பஞ்சம்பட்டி மணி, மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி துணை அமைப்பாளர் பாறைப்பட்டி வாஞ்சிநாதன், திண்டுக்கல் பகுதி செயலாளர்கள் சி.ஜானகிராமன், அ.இராஜேந்திரகுமார், மா.சந்திரசேகரன்,

திண்டுக்கல் மேற்கு பகுதி செயலாளர் ப.பஜுலுல் ஹக், பேரூர் கழக செயலாளர்கள் ஸ்ரீராமபுரம் ராஜா, சித்தையன்கோட்டை சக்திவேல், அய்யம்பாளையம் தங்கராஜ், பேரூராட்சி மன்ற தலைவர்கள் சின்னாளபட்டி பிரதீபா கனகராஜ், கன்னிவாடி தனலெட்சுமி சண்முகம், ஸ்ரீராமபுரம் சகிலாராஜா,

அய்யம்பாளையம் ரேகா அய்யப்பன், அகரம் நந்தகோபால், தாடிக்கொம்பு கவிதா சின்னத்தம்பி, வேடசந்தூர் பேரூர்கழக செயலாளர் கார்த்திகேயன், எரியோடு பேரூர்கழக செயலாளர் செந்தில்குமார், வடமதுரை பேரூர்கழக செயலாளர் மெடிக்கல் கனேசன், திண்டுக்கல் மாமன்ற உறுப்பினர்கள் நெல்லை சுபாஷ், ஜான்பீட்டர், 7வது வார்டு திமுக நிர்வாகிகள் வீரபாண்டி, நரசிங்கம், மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள், ஊராட்சி மன்ற நிர்வாகி கள், தி.மு.க. சார்பு அணி நிர்வாகிகள், இளைஞர் அணி நிர்வாகிகள், உட்பட தி.மு.க. வினர் பலர் கலந்துகொண்டனர்.



சிவகங்கை மாவட்டம் கொல்லங்குடி விட்டனேரி வெட்டுடையார் காளி அம்மன் திருக்கோவிலில் 21ஜோடிகளுக்கு நடைபெற்ற இலவச திருமணத்தில் பங்கேற்ற திருப்புவனம் பேரூராட்சி மற்ற தலைவர் த.சேங்கைமாறன் , கோவில் அறங்காவலர் குழு தலைவர் கண்ணப்பன், சிவகங்கை நகர்மன்ற தலைவர் சி.எம்.துரை.ஆனந்த்,திருமதி அனந்தி ஆனந்த் , சிவகங்கை மாவட்ட இந்து சமய அறநிலையத் துறை மண்டல இணைஆணையர் பாரதி,க.பொன்னுச்சாமி ஆகியோர் கலந்து கொண்டனர்.

### சிவகங்கை மாவட்டம்

# கொல்லங்குடிவிட்டநேரி திருக்கோயிலில் 21 ஜோடிகளுக்கு இலவச திருமணம்!

சிவகங்கை, அக்.23-

சிவகங்கை மாவட்டம் காளையார் கோவில் தாலுகா கொல்லங்குடி விட்டநேரியில் இந்து சமய அறநிலையத் துறைக்குட்பட்ட அருள்மிகு வெட்டுடையார் காளியம்மன் திருக்கோவில்உள்ளது. தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்திர வின் பேரில் இலவச திருமணம் இந்து சமய அறநிலையத் துறை சார்பில்மூன்று மாதங்களுக்கு ஒருமுறை நடைபெற்று வருகிறது . அதன் படி 21 ஜோடிகளுக்கு இலவச திருமணம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை காலை 10 மணி அளவில் கோவிலில் திருமணம் நடைபெற்றது.

மணமக்களுக்கு நாலு கிராம் தங்கத்தாலி, பீரோ ,கட்டில், மெத்தை, சமையல் பொருட்கள் உட்பட சீர் வரிசை பொருட்கள் வழங்கப்பட்டது . திருப்புவனம் பேரூராட்சி மன்ற தலைவர் த.சேங்கை மாறன் தலைமையில் திருமணம் நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் சிவகங்கை மாவட்ட இந்து சமய அறநிலையத் துறை இணை ஆணையர் திருமதி பாரதி, துணை ஆணையர் பி.சங்கர், உதவி ஆணையர்கள் இரா. ஞானசேகரன், கணபதிமுருகன்,மாவட்ட அறங்காவலர் குழு தலைவர் புவனேஸ்வரி, அறங்காவலர் குழு உறுப்பினர் ஏஆர். ஜெயமூர்த்திவெட்டுடையார் காளி அம்மன் கோவில் குழு தலைவர் வி.சி.கண்ணப்பன், அறங்காவலர் குழு உறுப்பினர்கள் கண. சந்திரன் சிவாச்சாரியார்,

திருமதி ராணி,கௌரி விநாயகர் கோவில் அறங்காவலர் குழுதலைவர் திருமதி ஆனந்திஆனந்த், சிவகங்கை நகர்மன்ற தலைவர் சி.எம். துரை. ஆனந்த், நிர்வாகிகள் சுப.தமிழரசன், தண்டபாணி, அழகப்பன், தமிழ்செல்வம், மாணவரணி சதீஷ், ரமேஷ், தகவல் தொழில்நுட்ப அணி சுசீந்திரன் , சிவாச்சாரியார் நேரு, வழக்கறிஞர் திருப்பதி, முத்தரசு, தென்னரசு, வரதராஜன், சி.முத்து,ஆர்.வி.எஸ். அரங்கநாதன், ஜான்சந்தியாகு,

மகளீரணி எஸ்தர்மேரி , நாட்டரசன் கோட்டை பேரூர் கழக செயலாளர் ஜெயராமன், உட்பட ஏராளமானவர்கள் கலந்து கொண்டார்கள். திருமணம் முடிந்து அனைவருக்கும் அறுசுவை உணவு வழங்கப்பட்டது .திருமண ஏற்பாடுகளை கோயில் செயல் அலுவலர் கோ. நாராயணி தலைமையில் அலுவலர்கள் ஊழியர்கள் செய்திருந்தார்கள்.

### திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி தலைமை!

# வட சென்னை திராவிடர் கழகம் கி.இராமலிங்கம் இல்ல மண விழா வரவேற்பு!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு - முன்னணியினர் வாழ்த்து!

சென்னை, அக். 23-

வடசென்னை மாவட்ட திராவிடர் கழக காப்பாளர் கி. இராமலிங்கம் - இரா. இலட்சுமி ஆகியோரின் புதல்வி இரா.கவிதா போரூர் கலாவதி - ரங்கநாதனின் புதல்வர் இரா.ஹேமந்த்குமார் ஆகியோரது மண விழா வரவேற்பு நிகழ்ச்சி திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் தலைமையில், இந்து சமய அறநிலையத் துறை (மற்றும்) சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் அமைச்சர், சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் பி.கே. சேகர்பாபு, சென்னை பெருநகர மேயர் பிரியா முன்னிலையில், இன்று (23.10.2024, புதன்கிழமை) மாலை 5 மணிக்கு பெரியார் நகர், கார்த்திகேயன் சாலையில் உள்ள திருவள்ளுவர் கூட்டுறவு திருமண மாளிகையில் நடைபெற உள்ளது.

இந்நிகழ்ச்சியில் திராவிடர் கழகத் துணைத் தலைவர் கவிஞர் கலி. பூங்குன்றன், வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி, தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு நிறுவனத் தலைவர் ப.ரங்கநாதன், தி.மு.க. மாநிலங்களவை உறுப்பினர் இரா. கிரிராஜன், திராவிடர் கழகப் பொதுச் செயலாளர்கள் துரை. சந்திரசேகரன், வீ.அன்புராஜ், பொருளாளர் வீ.குமரேசன், பிரச்சார செயலாளர் அ.அருள்மொழி, மாநில திராவிடர் கழக ஒருங்கிணைப்பாளர்கள் தஞ்சை இரா.ஜெயக்குமார், உரத்தநாடு இரா.குணசேகரன், திராவிடர் கழக வழக்குரைஞரணித் தலைவர் த.வீரசேகரன், திராவிடர் கழக செயலவைத் தலைவர் ஆ.வீரமர்த்தினி, திரா விடர் கழக வெளியுறவுச் செயலாளர்கோ.கருணாநிதி,

தமிழ்நாடு ஆதி திராவிடர் பழங்குடியின் ஆணைய உறுப்பினர் வழக்குரைஞர் சு.குமார தேவன், கொளத்தூர் கிழக்கு, மேற்குப் மாவட்ட செயலாளர்கள் அய். சி. எப்.வ. முரளிதரன், எ.நாகராசன், 67ஆவது வட்ட சென்னை பெருநகர உறுப்பினர் எம். தாவூத்பீ, வடசென்னை மாவட்டக் கழக தலைவர் தளபதி பாண்டியன், செயலாளர் புரசை சு.அன்புச்செல்வன், திராவிடர் கழக வழக்குரைஞர் இரா.இரத்தினகுமார் ஆகியோர் வாழ்த்துரை வழங்குகின்றனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### எம்.சி. சந்திரன்

### அக்டோபர் 23 (2006)



தனது இளமைக் காலத்திலிருந்தே கழகப் பணியில் ஈடுபட்டு, அம்பத்தூர், முகப்பேர் பகுதிகளில் கழகம் வளர பாடுபட்டவர்.

ஒருங்கிணைந்த செங்கல்பட்டு மாவட்டக் கழகப் பிரதிநிதியாக பொறுப்பு வகித்தவர்.

அம்பத்தூர் நகர்மன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டவர்.

“முகப்பேர் பகுதியில் கழகத்தை வளர்ப்பதில் வளர்பிறை சந்திரன்” என முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் பாராட்டப்பட்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### டி.ஆர். கோவிந்தன்

### அக்டோபர் 23 (2021)



தனது இளமைக் காலத்திலிருந்தே தீவிரமாக கழகப் பணியில் ஈடுபட்டு வந்தவர்.

சென்னை, அண்ணா நகர் பகுதியில் மாவட்ட பிரதிநிதி, வட்டச் செயலாளர், பொதுக்குழு உறுப்பினர் என கழகத்தில் பல்வேறு பொறுப்புகளை வகித்தவர்.

2006ல் சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

கங்காதீஸ்வரர் கோவில் அறங்காவலர், புரசைவாக்கம் கூட்டுறவு வங்கி இயக்குநர் ஆகிய பொறுப்பு வகித்தவர்.

சட்டநகல் எரிப்புப் போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களை முன்னெடுத்தி நடத்தியதோடு, அதில் கலந்து கொண்டு எட்டு முறை சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**